26 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

Acc-No- 10813

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 30-3-33

கோர்ட்டுக்கு மேல் கோர்ட்டு



கிராம முன்ஸிப் கோர்ட்டு, மேலே ஸப் கோர்ட்டு, பிறகு ஜில்லா கோர்ட்டு, கடைசியில் ஹை கோர்ட், இத்தனையிலும் அசடு வழிந்து விட்டு, பிறகு என் செய்வது? கோர்ட்டேறுவதே சொர்க்கமென்று உலவும் சிகாமணிகளின் பணச் செலவுக்கு சவுகரியமாக 'பெடரல் கோர்ட்' என்ற இன்னொரு கோர்ட்டை ஜான்புல் என்ற மாந்திரீகன் சிருட்டிக்கப் போகின்றானாம். "ஹு! மந்திரக்காளி! மாடக்காளி கட்டிடமே ஓடி வா! காசை யெல்லாம் விழுங்கு! லாயர்களே நீங்களும் கொஞ்சம் சாப்பிடுங்கள்!"

காங்கிரசும் கவுன்சிலும்

இன்று கல்கத்தாவில் கோலாகலமாக நடக்க ஏற்பாடாகி யிருந்த காங்கிரஸ் மகா சபையை அரசாங்கத்தின் இரும்புக்கை தடுத்து விட்டது. ஒட்டாவா ஒப்பந்தம், ஹரிஜனப் பிரச்னை, வெள்ளைக் கடுதாசி, இனிமேல் ராஜியத்திட்டம் முதலியவைகளை ஆராய்ச்சி செய்ய காங்கிரசுக்கு ஒரு சந்தர்ப்பம் கூடக் கொடுக்காமல் அரசாங்கம் தடுத்திருப்பது அநியாயம், அநியாயம் என்றே தேச பக்தர்கள் நினைக்கின்றனர். காங்கிரசிடம் இவ்வளவு பயமா?

தேசம் தவித்துக் கொண்டிருக்கிறது. தேச பக்த திலகங்களெல்லாம் சிறையில் கிடந்துழல்கின்றன. பிரிட்டனின் அரசியல் போக்கு தற்போக்காகவே இருந்து வருகிறது. இந்த சமயத்தில் யாரோ ஒரு சிலர் 'சட்ட சபைப் பிரவேசம்' என்ற ஒரு கரடியை விடுத்து வேடிக்கை பார்ப்பது சரியன்று. நாடு இருக்கும் நிலையில் சட்ட சபையாவது? மண்ணாங்கட்டியாவது? காங்கிரஸ் மகா சபை பகிரங்கமாகக் கூடுவதற்கும் வழியற்ற வாழ்க்கையில் காங்கிரஸ்காரன் சட்ட சபையைப் பற்றி எண்ணவும் இடமுண்டா? இந்த சமயத்தில் இந்தப் பிரச்னையைக் கிளப்புவது கட்டோடு தப்பித மென்றும், அவமானமென்றும் நாம் அபிப்பிராயப் படுகின்றோம். காங்கிரஸின் சார்பாக இதைப் பற்றிப் பேசுவதற்கு யாருக்கு உரிமை யிருக்கிறது என்றும் கேட்கின்றோம். மூலை முடுக்களில் சட்ட சபை மோகம் பிடித்த ஒன்றிரண்டு பேர் வழிகளும், பொழுதைப் போக்க அறியாத சில பத்திரிகைகளும் உளறுவதைப் பொருட் படுத்த வேண்டாமென்று தேச மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். காங்கிரஸின் புனிதப் பெயரை இச் சமயத்தில் தப்பிதமாக உபயோகிக்க முற்படுபவர்கள் பிறகு வருந்த நேரிடும் என்பதையும் எச்சரிக்கை செய்கின்றோம்.

இது நமது அபிப்பிராயம் மட்டுமன்று. ஒரு காலத்தில் இதே இந்தியச் சட்ட சபையில் அங்கத்தினராக இருந்த காங்கிரஸ் தலைவர், திரு பிரகாசம் அவர்களும் சட்ட சபை எண்ணத்தைக் கண்டித்ததோடு இது காங்கிரஸின் கட்டுப்பாட்டைக் குலைப்பதாகும் என்றும் கூறி யிருக்கின்றார். நண்பர்களே, "கட்டுண்டோம்! பொறுத்திருப்போம்! காலம் மாறும்."

பிரிட்டனே! என் செய்வாய்?

தேசம் முழுவதும் சர்க்கார் தந்த வெள்ளைக் கடுதாசியைக் கண்டித்து விட்டது. மிதவாதிகள், அமிதவாதிகள், கவுன்சில் பித்தர்கள், மகமதியர்கள், ஹிந்துக்கள், சிக்கியர், ஜாதிக் கிறுக்கர்கள், அனைவரும் இந்தக் கடுதாசியைப் பற்பல விதமாகத் தாக்கிக் கிழித்தெறிந்து வருகின்றனர். பார்லிமெண்டில் ஸாமுயேல் ஹோர் அதை ஒட்ட வைக்க முயன்றும் பயனில்லாது போய் விட்டது.

இனி பிரிட்டனுக்கு இரண்டு வழிகள் தானிருக்கின்றன. தனது மிருக பலத்தைக் காட்டி, மிரட்டி தனது கட்டளைகளுக்கு இந்தியா பணிந்தே தீரவேண்டுமென பிரிட்டன் வற்புறுத்தப் போகின்றதா? அல்லது 'வெள்ளைக் கடுதாசி' என்ற குப்பைக் கடுதாசியை வாபீஸ் வாங்கிக் கொள்ளப் போகின்றதா? சில மாதங்களுக்கு முன்பே மாக்டனால்டு அருளிய பிரசாதமாகிய வகுப்புப் பிரச்னைத் திட்டத்தில் ஹரிஜனங்களை ஹிந்து சமூகத்தினின்று பிரித்தது தப்பிதம் என்பதை உணர்ந்து அந்தப் பகுதியை பிரிட்டிஷ் சர்க்கார் வாபீஸ் வாங்கிக் கொண்டது போல இப்போது இந்த வெள்ளைக் கடுதாசி முழுமையுமே திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டியது தான் பிரிட்டனுக்கு யோக்யமான செயல்! அதைப் பிரிட்டன் செய்யுமா?

இந்தியாவில் எந்த வர்க்கத்தின் உதவியுமில்லாமல் புதிய அரசியலை நடத்துவதென்பது பகற் கனவுதான். இத்தனை எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஒரு அரசியலை பிரிட்டன் நுழைக்குமானால் பிறகு எப்போதும் அவசரச் சட்டங்கள், துப்பாக்கிகள், பாணுத் தடிகள் இவைகளைக் கொண்டுதான் நாட்டை அரசாள வேண்டி யிருக்கும். அடக்கு முறை அரசும் ஒரு அரசாமோ! நான்கு வருட காலமாக இந்தியாவை பிரிட்டிஷார் ஆளுகின்ற நேர்த்தியைக் கண்டு உலகம் சிரிக்கின்றது. இந்த மாதிரி ஆட்சியையே தொடர்ந்து நடத்த ஆசை யிருக்குமானால் பிரிட்டன் வெள்ளைக் கடுதாசி வழியையே தொடர்ந்து நடத்தட்டும். அதனால் பிற்காலத்தில் அதிக நஷ்டப்படப் போவது பிரிட்டனே யன்றி இந்தியாவல்ல! பிரிட்டிஷார் பிடிவாதம் கொள்ளக் கொள்ள, அடக்கு முறையில் இறங்க இறங்க, இந்தியாவுக்குத்தான் வெற்றி யென்பது உறுதி! பிரிட்டனே! என்ன செய்யப் போகின்றாய்?

இந்தியாவை வென்றார்களா?

பிரிட்டிஷ் அரசாங்கத்து யுத்த சபையில் அதுப் கூப்பர் என்பவன் பொக்கிஷ அதிகாரி யாக வேலை பார்த்து வருகின்றான். அவன் சமீபத்தில் ஏகாதிபத்தியத் திமிர் பொங்கும்படி லண்டனில் ஓர் பிரசங்கம் செய்தான்.

"எகிப்து தேசத்தையும் இந்தியா தேசத்தையும் ஒரே தரமாக நினைத்து நம்மவர் பேசுகின்றார்கள். எகிப்து தேசத்தை நாம் வெல்லவில்லை. ஆனால் இந்தியாவோ நாம் சண்டையிட்டு வென்றுள்ள ஓர் பூமியாகும்" என்று கூறினான்.

இந்திய சரித்திரத்தை அடியோடு மறைத்து விட முடியாது. இந்தியாவை ஆங்கிலேயர் தர்ம யுத்தம் செய்து வென்றார்களா வென்பது முற்றிலும் சந்தேகமான சமாசாரம். எவ்வளவு சூழ்ச்சி! எவ்வளவு புனசுருட்டு! மகமதிய நவாபுகளையும், ஹிந்து அரசர்களையும் ஒருவரை யொருவர் குத்திவிட்டு, சண்டை யிடுமாறு, பிரிட்டிஷ் வர்த்தகன் ஜாலங்கள் செய்தது பொய்யா? கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் முதலிய ஆங்கில புருஷர்கள் செய்த தில்லு மில்லுகளைக் கண்டு உலகமே பிரமித்து நின்றதே! பிரிட்டிஷ் பார்லிமெண்டு கூட அவர்களைக் கண்டித்ததுண்டு. யுத்தம் செய்து வென்றதைவிட இந்தியாவில் சூழ்ச்சியில் அபகரித்த நாடுகள் தான் அதிக மென்பதை எப்படி மறைக்க முடியும்? அதை யெல்லாம் மறைத்துப் பள்ளிக்கூடப் புத்தகங்களில் எழுதுவது போதா தென்று பிரசங்கம் செய்யவும் துணிந்து விட்டார்கள். நிற்க,

இந்தியா போரில் கிடைத்ததாயினும் ஆகுக, சூழ்ச்சியில் பிடித்ததாயினும் ஆகுக, அதை நிரந்தரமாக அடிமைச் சங்கிலியால் ஆங்கிலேயர் தளைத்துப் போடவேண்டு மென்பது கட்டாயமா என்ன? "இந்தியா எப்போதும் இங்கிலாந்தின் கைக்குள்ளேயே நசுங்கிக் கொண்டிருக்க வேண்டுவதே நியாயம்" என்ற கருத்தோடு மிஸ்டர் கூப்பர் பேசியதாகத் தெரிகிறது. இது அநியாயமான எண்ண மன்றோ!

"நாட்டு மாந்த ரெல்லாம் தம்போல்
நரர்களென்று கருதார்;
ஆட்டு மந்தையா மென்று உலகை
அரசரெண்ணி விட்டார்"

என்ற பாரதியாரின் வாக்கை மெய்ப் படுத்துவதாக இருக்கிறதே இந்த கூப்பரின் கூற்று!

லாட்டரி புத்திகள்!

சோற்றுக்கு லாட்டரி போட்டாகிறது; ஆனால் லாட்டரி டிக்கட்டுகள் விற்பனையாவது ஒய மாட்டேனென்கிறது. அயர்லாந்து லாட்டரி, கோவா லாட்டரி, போர்ச்சுகல் தேசத்தில் ஒரு ஆஸ்பத்திரி கட்ட லாட்டரி, இத்தகைய பல தேசத்து லாட்டரி டிக்கட்டுகளும் இந்தியாவில் விற்பனையாகி விடுகிறதென்றால் நம்மவரின் லாட்டரி பித்தத்தின் அளவை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

பம்பாயில் மட்டும் கோவா லாட்டரி டிக்கட்டுகளின் விற்பனை வருஷத்துக்கு 50 லக்ஷமென்று மதிப்பிடப் படுகிறது. வெளி நாடுகளில் கட்டப்படும் ஆஸ்பத்திரிகளிடம் பரம காருண்யம் கொண்டு லாட்டரி டிக்கட் வாங்கும் பிரமுகர்கள் தங்கள் தேசத்து விவகாரங்களைக் கொஞ்சமாவது கவனிக்கிறார்களா வென்பது தெரிய வேண்டும். லாட்டரி டிக்கட் வாங்குபவனுக்கு ஆஸ்பத்திரியும் ஒன்றுதான்; டெர்பி டிக்கட்டும் ஒன்றுதான். ஏதாவதொரு இழவு கடுதாசியை வாங்கி வைத்துக்கொண்டு, பிரைஸ் விழுந்ததா, விழுந்ததா வென்று பத்திரிகைகளைப் பார்ப்பதுதான் அவர்கள் தலையெழுத்து. இந்தியப் பணத்திலிருந்து பல லக்ஷ ரூபாயை எடுத்துக்கொண்டு போன பின்னர் ஏதோ சில ஆயிரம் ரூபாய்களை இங்குமங்கும் பரிசாகக் கொடுத்து எய்த்து விடுகின்றனர்.

தாயாரைப் பட்டினி போட்டு விட்டு வழிப் போக்குத் தடியனுக்குச் சோறு போடுவதுண்டா? நமது நாட்டிலேயே எத்தனையோ தர்ம ஸ்தாபனங்கள் சாகுந்தருவாயி லிருக்கின்றன. அவைகளுக்குக் காலணு தர்மஞ் செய்வோரைக் காணோம். ஆனால், அயர்லாந்து ஆஸ்பத்திரிக்கு 'உதவி' செய்கின்றார்களாம்! ஆகவே இது 'உதவி' யன்று. லாட்டரி வெறியே!

பந்தய புத்தி, லாட்டரி புத்தி முதலியவை தேசத்தைப் பாழாக்கி வருகின்றன. பம்பாயிலிருந்து வெளிவரும் ஒரு ஆங்கிலப் பத்திரிகை "இந்த வாரம் 6000 ரூபாய் உனக்குத்தான்" என்று சொல்லி ஓர் போட்டிப் பந்தயம் போட்டிருக்கிறது. அவ்வளவுதான்! தலைகள் கிறுகிறுத்து விடுகின்றன. அதிகப் பத்திரிகை விற்பதில் 6000 ரூபா லாபம்! பரிசுக் கட்டணம் வருவதில் 10000 ரூபா வரவு! அதில் 6000 ரூபாயை வீசி யெறிவதற்கு கசக்குமா என்ன? இந்த அசட்டு மோகங்கள் என்றைக்குப் போகுமோ?

நமது குறிப்புகள்

"வைத்தியா வரி கொடு!"

பம்பாய் துரைத்தனத்தின் அநுமதி பெற்று அங்குள்ள லோகல் போர்டுகள் புது தினுசான வரிகள் சிலவற்றைப் போடப் போகின்றதாம். அந்த வரித் திட்டத்தின் கீழ் டாக்டர்கள் வருடா வருடம் பத்து ரூபாய் தர வேண்டுமாம். லாயர்களும் அந்தத் தொகையைக் கக்கியாக வேண்டுமாம். அத்தோடு நிற்கவில்லை. ஆயுர்வேத வைத்தியர்களையும் வருடா வருடம் 5 ரூ. வரி தர வேண்டுமென்று கேட்கப் போகிறார்களாம். இது என்ன கூத்து? நம் நாட்டில் எல்லோரும் ஆயுர்வேத வைத்தியர்கள் தான். குருட்டுப் பாட்டிக்குக் கூட சுக்குக் கஷாய மருந்து தெரியும். ஆகவே யாருக்கு வரி போடுவது, யாருக்குப் போடாமலிருப்பது? நாட்டு வைத்தியம் தெரிந்து கொண்டிருப்பவர்களுக்கு வரியென்றால் இனிமேல் தனக்கு வைத்தியம் தெரியுமென்று யாரும் முன் வர மாட்டார்களென்பது நிச்சயம்! பாவம்! துரைத்தனங்களுக்கும் லோகல் போர்டுகளுக்கும் இப்போது பணப் பித்தம் தலைக்கேறியிருக்கிறது. அதற்கு யாராவது மருந்து கொடுக்கலாகாதா? 'வரி வரி வரி' யென்ற சத்தமாவது கொஞ்சம் ஓய்ந்திருக்குமே!

இங்கிலாந்தில் பகிஷ்காரம்

ஜர்மனியில் ஹிட்லர் என்பான் நடத்தும் இரும்புக் கையாட்சியின் கீழ் யூத ஜாதியினர் அகப்பட்டுக் கொண்டு தவிக்கின்றார்களாம். ஆகவே இங்கிலாந்திலுள்ள யூதர்கள், ஜர்மனிக்குப் பதிலுக்குப் பதில் செய்ய விரும்பி, ஜர்மன் சாமான்களை பகிஷ்காரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்களாம். இந்தியாவில் மார்வாடி எப்படியோ, அந்த மாதிரியே ஐரோப்பாவிலுள்ள யூத ஜாதியினரும், பண மூட்டைகளின் மீது குந்தியிருப்பவர்கள். அவர்கள் இப்போது 'பகிஷ்கார' இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றனர். இதனின்று என்ன தெரிகிறது? ஏதாவதொரு ஜாதியினரோ தேசத்தினரோ இன்னொரு தேசத்தினர் செய்யும் அக்கிரமத்தைத் தடுக்க வேண்டுமாயின் உடனே 'பகிஷ்காரம்' என்ற ஆயுதத்தைக் கையாளுகின்றனர். அயர்லாந்தில் இன்றைக்கும் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்கார இயக்கம் மும்முரமாக நடைபெற்று வருகிறது. சீனாவில் ஜப்பான் பகிஷ்காரம் பலமாயிருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ 'அந்நியச் சாமான் பகிஷ்காரம்' என்று சொன்னால் உடனே சிறைத் தண்டனை கிடைக்கிறது. இந்தியாவுக்குள்ள எவ்வளவோ துர்ப்பாக்கியங்களோடு இதுவுமொன்று போலும்!

கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

ஜர்மன் சண்டைக்குப் பிறகு ஜர்மனியிடமிருந்த சில தீவுகளைப் பிற தேசத்தினர் பிடுங்கிக் கொண்டனர். அந்தப் பூமிகளை ஸர்வ தேச சங்கம் எடுத்துக் கொண்டு இதர அரசாங்கங்களிடம் பாதுகாப்பில் விட்டு வைத்தது. அதே மாதிரி ஜர்மனியிடமிருந்து பறித்த பஸிபிக் தீவுகளை ஸர்வ தேச சங்கம் ஜப்பானிடத்தில் கொடுத்து காப்பாற்றும்படி சொல்லியிருந்தது. கடைத் தேங்காயை வழிப் பிள்ளையாரிடம் காட்டினால், வழிப் பிள்ளையார் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டாராம். அந்த மாதிரி பஸிபிக் தீவுகளை ஜப்பான் தனது அரசோடு சேர்த்துக் கொண்டது. இப்போது ஸர்வ தேச சங்கத்தினின்று ஜப்பான் ராஜீனமா செய்து விட்டபடியால் அந்த பஸிபிக் தீவுகளை ஜப்பானிடமிருந்து பிடுங்கி விட வேண்டுமென்று ஐரோப்பிய வல்லரசுகள் விரும்புகின்றன. ஜர்மனி அந்தத் தீவைத் தன்னிடமே கொடுத்து விடும்படி ஸர்வ தேச சங்கத்தைக் கேட்டிருக்கிறது. உருசி கண்ட பூனை விட்டு விடுமா? அதைத் தருவதற்கு ஜப்பான் சால்ஜாப்பு சொல்கிறதாம். ஸர்வ தேச சங்கத்தில் அங்கத்தினனாக இருக்கவும் கூடாது, ஆனால் சர்வ தேச சங்கத்தின் சுண்டல் விநியோகத்தையும் இழக்கக் கூடாது என்று ஜப்பான் கொண்டுள்ள எண்ணம், கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை விவகாரமாகவே இருக்கிறது.

சோம்பேறிப் பரிசு

வெறுமனே கதையும், பாட்டும் எழுதிக் குவித்தவர்களுக்கெல்லாம் 'நோபல்' வெகுமதி கொடுத்துத் தொலைக்கின்றார்கள். உலகில் சும்மா யிருப்பது ரொம்ப கடினமான காரியமென்பது நோபல் வெகுமதி தருபவர்களுக்குத் தெரியாது போலிருக்கிறது. சோம்பேறித்தனத்துக்கு ஒரு நோபல் வெகுமதி தருவதென்று ஏற்பட்டதானால் அந்தப் பரிசை சென்னை மாகாணம் உடனே தட்டிக் கொண்டு வந்து விடும். சென்னைச் சட்ட சபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் இந்த சோம்பேறிப் பரிசுக்கு லாயக்கானவர்களென்ற இரகஸ்யத்தை எழுதி அனுப்பலாமா?

கோயில்கள் பாழடையாதா?

(மகாத்மா காந்தி)

ஒரு நிருபர் பின்வருமாறு என்னை ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்.

"ஹரி ஜனங்களைக் கோயிலில் அநுமதித்து விட்டால் உடனே கோயில்களை மேல் ஜாதியார்களும், குருக்கள்களும் விட்டு விடுவார்களென்று எண்ணவேண்டி யிருக்கிறது. ஆகவே கோயில் பிரவேச இயக்கத்தின் பலனாக கோயில்கள் பாழடையாதா?" என்பது அவருடைய கேள்வி.

"நாட்டில் நடந்துவரும் இயக்கத்தை இந்த நிருபர் கூர்ந்து கவனிக்கவில்லை யென்றும், இந்த இயக்கத்தைக் கண்டிக்கும் எண்ணத்தோடேயே இவர் இருந்து வருகிறாரென்பதும் ஏற்படுகிறது. 'குறிப்பிட்ட ஒரு கோயிலில் பலாத்காரமாக நுழைந்தே தீரவேண்டும்' என்ற எண்ணத்துடன் இந்த இயக்கம் ஆரம்பிக்கப் பட்டதா? இல்லவே யில்லை. அது ஓர் புறம் இருக்க, 'சட்டத்தின் உதவியைக் கோருவானேன்?' என்றும் கேட்கலாம். எங்கெங்கு பொதுஜன அபிப்பிராயம் பக்குவமடைந்துளதோ அங்கெல்லாம் கோயில்கள் திறக்கப்படுவதற்கு சவுகர்யமாகவே சட்டங்களின் உதவி நாடப்பட்டிருக்கிறது. இப்போது பொதுஜன அபிப்பிராயம் முற்றிலும் சாதகமாக இருக்கும் இடங்களில் கூட கோயிலில் அநுமதிக்க முடியாதபடி சட்டம் தடுத்துக் கொண்டிருக்கிறதே, என் செய்வது? எப்போது மேல் ஜாதியார், குருக்கள்மார், முதலிய அனைவரும் ஒருமிக்கச் சேர்ந்து, குறிப்பிட்ட கோயிலுக்குள் ஹரி ஜனங்கள் பிரவேசிக்கலாமென வாக்களிக்கின்றார்களோ அப்போது தான் கோயில் பிரவேசமும் நடைபெறும். ஆகவே கோயில்கள் பாழடைவதா வென்ற பிரச்சினையே தோன்றுவதற்கில்லை. ஸ்வதாவாகத் திறக்கப்படும் கோயில்கள் சுத்தம் மிகுந்தவை யன்றோ! மேலும் இப்போது அநேக இடங்களில் ஹரி ஜனங்களுக்குத் திறக்கப்பட்ட கோயில்களும் உண்டு. அவைகளை யெல்லாம் விட்டு விட்டு, மேல் ஜாதியார்களும் குருக்கள்மாரும் ஓடிவிட வில்லை யென்பதை கண்ணுறப் பார்க்கின்றோம். ஆகவே கோயில்கள் ஒருபோதும் பாழடையா!

—"ஹரிஜனம்."

"கப் சப் வாயை மூடு!"

நவநகர் சமஸ்தானாதிபதியான ஜாம் ஸாஹேப் பெரிய கிரிக்கட் ஆட்டக்காரன் லங்காஷயர் துணிகளைக் கொணர்ந்து இந்தியாவில் கடை போட்டு விற்கப் போவதாக சவடால் அடித்தவன். இந்த கெடுபிடிக்காரனின் அரசாட்சியில் நவநகர் ஜனங்கள் வாயை மூடிக்கொண்டு கிடக்கின்றனர். அந்த கெடுபிடிக்காரனை இன்னொரு பெரியவர் "கப் சப் வாயை மூடு" என்று உத்தரவிட்டாராம்; நவநகர் அரசனும் வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்தானும்; இந்தச் செய்தியைக் கேட்ட நவநகர் ஜனங்கள் ரகஸ்யத்தில் பால் பாயசம் வைத்துச் சாப்பிட மாட்டார்களா என்ன?

இந்தியாவின் ஐக்கிய அரசாட்சி அமைப்பைப் பற்றி ஆலோசிக்க சுதேச அரசர்களெல்லாம் கூடினார்கள். அக் கூட்டத்திற்கு வைஸ்ராயும் வந்திருந்தார். அந்த நரேந்திர மகா மண்டலத்தில் தலைவனான ஜாம் சாஹேப் பிரமாதமாக ஒரு பிரசங்கத்தைப் படித்தான். யார் எழுதிக் கொடுத்த சரக்கோ அது! படித்துக்கொண்டே யிருந்த போது திடீரென்று வைஸ்ராய் வில்லிங்டன் எழுந்திருந்து "ஐக்கிய அரசியல் ஏற்படுவதைப் பற்றி குறை கூறலாகாது தெரியுமா?" என்று ஓர் வார்த்தை சொன்னார். அவ்வளவு தான்! ஜாம் சாஹேபுக்கு வாயடைத்து விட்டது. பொட்டலம் போல பிரசங்கத்தை மடித்துப் பையில் போட்டுக்கொண்டு மௌனம் சாதித்து விட்டான். இந்த ஆடுதன் ராஜாக்களெல்லாம் வைஸ்ராயிடத்தில் ஆட வேண்டியது தான் என்பதற்கு இதை விட என்ன அத்தாட்சி வேண்டும்? ஆனால் அந்தந்த சமஸ்தானங்களில் இந்த கூஜாக்கள் பண்ணும் அட்டகாசமோ, "சண்ட பிரசண்ட, மார்த்தாண்ட, திக்கெல்லாம் வெற்றி பெற்ற" என்று விருதுகள் கூறிக் கொள்வதோ கொஞ்சம் நஞ்சமன்று.

வற்றல் மகாநாடு

['பியாரா' எழுதியது]

இம் மாதத்தில் ஆடுதுறை என்ற ஊரில் விவசாய டிமான்ஸ்டிரேட்டர்கள் ஒன்று கூடி மிக்க பலமான யோசனைகள் செய்தார்களாம். இன்பகரமாக முடிவடைந்த அம்மகா நாட்டிற்கு போகாமலிருந்து விட்டேனே யென்று நான் வருந்துகின்றேன். அம் மகா நாட்டில் முக்கியமாக எனது சகோதர மிராசுதாரர்களுக்கு அவசியமான விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன. அவ் விஷயங்களை அறிந்து கொள்ள விவசாயிகள் கவலைப்படாம லிருந்தால், அது என்னுடைய பிசகு அல்ல.

"இந்த வியாபாரச் சுணக்க காலத்தில் மிராசுதார்களுக்கு விவசாய இலாக்கா என்னென்ன செய்யலாம்" என்ற விஷயமாக அம் மகா நாட்டினர் யோசித்தார்களாம். விவசாய இலாக்கா! ஆமாம்! நிச்சயமாக அதுதான்! "அப்படி ஒரு இலாக்கா இருக்கிறதா?" என்று சந்தேகப் படுகிறவர்களுக்கு என் செய்வது? "சம்சயாத்மா வினச்யதி" என்று பகவான் கீதையில் சொன்ன வார்த்தையைத் தான் சொல்ல வேண்டும். 'விவசாய இலாகா' என்ற பெயரை அறிந்து கொள்ளாமல் விவசாயத்தொழிலை ஏன் ஒருவன் செய்யவேண்டும்?

போனது போகட்டும். இப்பொழுதாவது தெரிந்து கொள்ளுங்கள். அப்படி ஒரு இலாக்கா இருக்கின்றது. இருந்தே திருகிறது. நமக்காக அடிக்கடி யோசனை சொல்லித் தருகிறது. அந்த இலாக்காவின் அபூர்வ யோசனையில் ஒரு 'ஸாம்பிள்' வேண்டுமா? ஷை ஆடுதுறை மகாநாட்டிலும் அந்த யோசனையைப் பற்றி நன்ருய் யோசித்தார்களாம். கரும்பு, வாழை, மஞ்சள், காய்கறி, அன்னுசி, பழமரங்கள் இவைகளை இனி மிராசுதார்கள் பயிரிட்டுப் பலனடைய வேண்டும் என்று அதிக நேரம் (காப்பி கூட சாப்பிடாமல்) அங்கு விவாதம் நடந்ததாம்.

சனியனை வளர்ப்பது போல, நெற் பயிரை வளர்த்து ரயில்வேக்காரனிடமும், கிஸ்தி வசூல் செய்பவனிடமும் இனி நாம் கெஞ்சுவானேன்? விலை சுணக்கத்தைப் பற்றி கவலைப் படுவானேன்? தாசில்தார்கள் அறிக்கைகளை விடுவானேன். இனி இந்த நெல்லுத் தொழிலை விட்டு விட்டு ஆடுதுறை மகாநாட்டின் அருமையான யோசனைகளை அனுஷ்டிக்க முற்படலாம்.

மேற்படி மகாநாட்டில் குடிசைத் தொழிலைப் பற்றியும் பேச்சு வந்ததாம். காந்தி என்ற ஒரு பைத்தியக்காரர் ராட்டினத்தை வைத்துக் கொண்டு அழச் சொன்ன தொழிலும் ஒரு குடிசைத் தொழிலாமோ? ஆடுதுறையார் சொன்ன யோசனையே யோசனை! வெகு சுலபமான காரியம்! என்ன அது? அதுதான் வாழைக்காய் வற்றல்! வீடுதோறும் வற்றல் போட்டால் அது பெரிய சிறந்த குடிசைத் தொழிலாகி விடுமாம்!

சரி. இந்தத் தொழிலை அனைவரும் செய்வோம். ஆனால் அந்த வாழைக் காய் வற்றலை எங்கே விற்பது? ஏக்கம் பிடித்து ஷை டிமான்ஸ்டிரேட்டர்களுக்கோ, அல்லது விவசாய இலாகாவுக்கோ அனுப்பி விடுவதா? விற்பதற்கு மட்டும் யோசனை ஏதும் சொல்லித் தராதது வருந்தத் தக்கதே! ஆனால் வற்றலின் உபயோகத்தைப் பற்றிச் செய்கையிலேயே ஷை மகா நாட்டினர் காட்டி விட்டார்களாம்.

டிமான்ஸ்டேட்டர்களுக்கும், சூப்ரண்டுகளுக்கும் ஒரு விருந்து நடத்தினர்கள். அவர்கள் சும்மா யிருக்கலாமா? பதிலுக்கு ஒரு தேக் கச்சேரி நடத்தினர்களாம். இந்த இன்ப மகா நாட்டில் கலந்து கொள்ளாது போனேமே என்று நான் ஏங்கியதில் தப்பித முண்டா, சொல்லுங்கள். தஞ்சை ஜில்லாவில் நடக்கும் மகா நாடுகள் தடியடியில் முடியுமென்பார்கள். அவ்வாறின்றி இந்த மகாநாடு சாப்பாட்டில் முடிந்தது சந்தோஷம் தானே.

இப்படி நமக்கு அபூர்வமான வாழைக்காய் வற்றல் யோசனை சொல்லித் தந்த அறிஞர்களை வரவழைத்து வற்றல் சாம்பார் செய்து, வற்றல் வறுத்து, விருந்து செய்து வைக்க வேண்டாமா?

ஜாமீன் உத்திரவு

அமிருதஸரஸிலுள்ள 'ஹுபிபில்லா' என்னும் அச்சுக்கூடத் தலைவருக்கு 6000 ரூ. ஜாமீன் கட்டும்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. காசியில் "சமார் யாத்ரா" என்ற ராஜீய நூலின் 200 பிரதிகளையும் போலீசார் ஒரு அச்சுக்கூடத்தினின்று கைப்பற்றினர்.

கள்ளிக்கோட்டையில் காங்கிரஸ் போஸ்டாபீஸ் நடத்தியதாக கைது செய்யப்பட்ட ஐவருக்கும் தலா 4 மாதம் கடுங்காவலும், 30 ரூ. அபராதமும்.

ஆசியாவின் விழிப்பு!

நவாப்-யார்-ஜங் என்ற பெரியார் ஹைதராபாத்திலுள்ள ஓர் அறிஞர். அவர் உலகம் முழுதும் பிரயாணம் செய்துவிட்டு சமீபத்தில் தான் இந்தியாவுக்கு வந்துளார். அவரை டெல்லியில் பிரசங்கம் செய்யுமாறு பொது ஜனங்கள் வேண்டவே, இரண்டு பிரசங்கங்கள் செய்தனர். 'ஆசியாவின் விழிப்பு' என்ற தலைப்பின்கீழ் அவர் செய்த பிரசங்கத்தின் பகுதி பின்வருமாறு :—

“ஆசியாவின் நாகரிகம் 18 வது நூற்றாண்டில் சிதற ஆரம்பித்தது. மொகல் சாம்ராஜ்யம், துருக்கி அரசாங்கம், பர்ஷிய துரைத்தனம் இவைகள் சிதறிய காலமும் இதுவே. இதுதான் சமயமென்று ஐரோப்பியர் ஆசியாவில் நுழைந்தனர். இந்தியாவின் தங்கத்திற்கு ஆசைப்பட்டே ஐரோப்பியர் கீழ்நாடுகளுக்கு வந்தனர். ஸூயெஸ் கால்வாய் வெட்டியதும் இந்தியாவுக்குப் போய் வருவதற்காகத்தான். ஆனல் 1914ம் ஞூல்த்து ஐரோப்பிய மகா யுத்தம் ஆசியாவின் கண்களைத் திறந்தது. ஐரோப்பிய நாகரிகத்தின் ஆபாஸம் தெரிந்தது. ஆசியாவில் சுதந்திர தாகம் ஏற்பட்டது. எகிப்தில் ஜக்லுல் பாஷாவும், துருக்கியில் கமால் பாஷாவும், பெர்ஷியாவில் ரேஜாகானும் இந்தியாவில் லோகமான்ய திலகரும், ஆசியாவுக்கே தீபம் போல மகாத்மா காந்தியும் தோன்றினர். இதே சமயத்தில் தான் ருஷியா, துருக்கி, ஆப்கனிஸ்தானம் முதலியவை தலை யெடுத்துக் கிளம்பின. ஆனல் இந்தியாவின் மக்களுக்குள் வகுப்புச் சச்சரவு மிகுந்திருந்தபடியால் இந்தியா இந்த நற்சமயத்தை நழுவவிட்டு விட்டது.

“ஆனல் ஆசியாவில் தேசிய உணர்ச்சி தலையெடுத்து வருகின்றது. நான் எகிப்துக்குப் போயிருந்தபோது நஹாஸ் பாஷாவைச் சந்தித்தேன். “சுதேசி என்ற உணர்ச்சியை நமக்கு ஊட்டியதற்காக நான் காந்திஜியைப் பணிகின்றேன்” என்று அவர் என்னிடம் கூறினர். பர்ஷியாவிலும், ஆப்கனிஸ்தானத்திலும் சுதேசிய உணர்ச்சி கரை புரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. ஆப்கானிய இராணுவத்தில், ஆப்கனிஸ்தானத்தில் செய்யப்பட்ட ஆடைதான் கொடுக்கப்படுகிறது. ஆசியாவுக்கெல்லாம் சுதேசி உணர்ச்சியை ஊட்டிய காந்திஜி பிறந்த இந்தியாவிலோ இன்னும் போதிய சுதேசியம் பரவவில்லை, என் செய்வது?”

'தர்ம கர்த்தா' புத்தி!

இந்தியாவையும் படைத்து, அதிலுள்ள மக்களை பிரிட்டிஷ் 'தர்ம கர்த்தா'க்களிடம் ஒப்படைத்து விட்டு ஈசுவரன் தூங்கப் போய் விட்டதாக அநேகர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். “எங்களுடைய 'தர்ம கர்த்தா' உத்தியோகத்தை நிறுத்தி விட்டோமானல் இந்தியா அழிந்து போகுமே” என்று சில காருண்ய பிரிட்டிஷார் சொல்லிக் கொள்வது வழக்கம். யார் அந்தக் காருண்ய புருஷர்கள் என்று கேட்கலாம். சர்ச்சில் என்பார் அவர்களில் ஒருவர்! போதுமா இந்த உதாரணம்?

இந்த 'தர்ம கர்த்தா'க்களின் அழகான ஆட்சியை இருநூறு வருஷங்களாக இந்தியர் அநுபவித்திருக்கின்றனர். இந்த அநுபவம் போதுமானது. உடமைக்காரன் தன் சொத்தை தானே பாதுகாத்துக் கொள்கிறேன் என்று சொல்லும் போது மூன்றாவது மனிதன் உதவி தேவையில்லை யல்லவா? அழையாத மனிதன் நுழைந்தது போலேவே இப்போது இந்த 'தர்ம கர்த்தா'க்களின் ஆட்சி யிருக்கிறதன்றோ!

நிற வித்தியாச மின்றி தனது சர்க்காரில் இந்த தர்ம கர்த்தாக்கள் நடந்து கொள்கின்றனரா? அறிவாளிகளான இந்தியர்களோடு ஸமத்துவம் கொண்டாடத் தயாரா யிருக்கின்றனரா? பயங்கரமான அடக்குமுறைப் பாணங்களால் ஊரை கிடு கிடுக்கச் செய்யாம லிருக்கின்றனரா? விளைவுக்குத் தகுந்தாற் போல வரி வசூல் செய்து வருகின்றனரா? இங்கிலாந்தில் சராசரி ஒரு மனிதன் எவ்வளவு சம்பாதிக்கின்றானே அந்த அளவு இந்தியனும் சம்பாதிக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்து தருகின்றனரா? பிஜித் தீவிலும், கெனியாவிலும் இந்தியன் உதை படுவதை இந்தத் தர்ம கர்த்தாக்கள் தடுக்கின்றனரா? இந்த மாதிரி ஆயிரக் கணக்கான கேள்விகளைக் கேட்கலாம்.

'தர்ம கர்த்தா' 'தர்ம கர்த்தா' என்று சில பிரிட்டிஷார் சொல்லிக் கொள்வ தெல்லாம் சுத்தப் பொய்! பிரிட்டிஷார் பலருக்கு இந்தியாதான் சோறு போடுகின்றது. மிருக பலத்தின் உதவியால் இந்தியாவை அடக்கி ஆளவேண்டி யிருக்கிறது. இது தான் பகிரங்கமான உண்மை. ஆனல் அதை பகிரங்கமாகச் சொல்ல விரும்பாது இதர தேசங்களை மயக்குவதற்கு 'தர்ம கர்த்தா' வென்று புனைப் பெயரைத் தாங்களே சூட்டிக் கொள்கின்றனர். இந்தப் பெயர் தகுமோ?

கல்கத்தா காங்கிரஸ்

மதுரையிலிருந்து கல்கத்தா காங்கிரஸிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது கோஷ்டிப் பிரதிநிதிகள் 12 பேர்களில் 11 பேர்கள் கிராமங்களில் கால் நடையாக பஜனை, ஊர்வலங்கள் நடத்திக்கொண்டு செல்லும்போது வெள்ளாளப்பட்டியில் கைது செய்யப்பட்டு மதுரைக்கு கொண்டு வரப் பட்டிருக்கிறார்கள்.

கல்கத்தாவில் பல கடைகளும், வீடுகளும் சோதனை யிடப்பட்டு மூவர் கைது செய்யப்பட்டனர். புர்ரா பஜார் சர்வாதிகாரிக்கு 4 மாதம். நாகபுரியில் திலக வித்யாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ திஜேர் உள்பட 26 பிரதிநிதிகளும், நேற்று ஹௌரா ஸ்டேஷனில் வந்திறங்கிய 8 பீஹார் பிரதிநிதிகளும்; பூரி காங்கிரஸ் சர்வாதிகாரியும் ஏழு காங்கிரஸ் பிரதிநிதிகளும் ராஜஷாஹி பிரதிநிதிகள் 6 பேர்களும், லாகூர் பிரதிநிதிகள் 20 பேர்களும் கைது செய்யப்பட்டனர். எல்லையை விட்டு வெளியே போகக்கூடாதென்று தடை யுத்திரவு பிறப்பிக்கப்பட்ட கராச்சி பிரதிநிதிகள் எட்டு பேர்களும் கைதி.

நன் கொடை

கல்கத்தாவில் ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் தர மாதம் 1க்கு 1000 ரூபாய் கொடுப்பதாக ரகுமால் தர்ம பரிபாலன சபையார் வாக்களித்திருக்கிறார்கள்.

வன சத்தியாக்கிரகம்

நாகபுரியில் வன சத்தியாக்கிரகம் செய்ததற்காக வர்தா காங்கிரஸ் 37-வது சர்வாதிகாரியான ஸ்ரீமதி கங்குத்தாய் வலுஞ்சகாரும் மற்றும் 9 தொண்டர்களும் கைதியாயினர். கஸர் கோட்டில் ஒருவருக்கு 5 மாதம் தண்டனை.

விசேஷ அதிகாரம்

வங்காளத்திலுள்ள சில ஜில்லாக்களில் நடக்கும் ராஜீய இயக்கங்களை அடக்குவதற்கு இப்போதைய சட்ட திட்டங்கள் போதாமையால் போலீஸ் கமிஷனருக்கும் பல ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளுக்கும் விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருப்பதாக ஒரு அறிக்கை கூறுகிறது.

பிரஷ்ட உத்திரவு

அமிருதஸரஸிலிருந்து ஆனந்தசாமி என்ற வைத்தியர் 24 மணி நேரத்திற்குள் வெளியேறி விடும்படியாக உத்திர விடப்பட்டார்.

கைதியானவர்கள்

கான்பூரில் 13 பிரதிநிதிகளும், லஷ்மணபுரியில் 5 பேர்களும் கைதியானார்கள்.

அலகாபாத்தில் 16 பிரதிநிதிகள் கைது செய்யப்பட்டனர். பம்பாய்ச் சர்வாதிகாரி ஸ்ரீமதி சத்ரா தேவிக்கு 1 வருஷமும் 100 ரூபும். தேவேந்திர குமாருக்கு 6 மாதம்.

கண்ணனூரில் கைதியான தொண்டர்களில் ஐவருக்கு ஒரு குற்றத்துக்கு தலா 6 மாதம் 15 ரூ. அபராதமும். இன்னொரு குற்றத்துக்காக இருவருக்கு 6 மாதமும் 30 ரூபாயும், மற்றும் இருவருக்கு 9 மாதமும் 30 ரூபாயும், ஒருவருக்கு 18 மாதமும் 30 ரூபாயும் தண்டனை. ரயிலில் போய்க் கொண்டிருந்த குன்னிராமன் நம்பியாரின் மூட்டைகள் சோதிக்கப் பட்டனவாம். 14 பேருக்கு 144 தடை யுத்திரவு.

சென்னையில் திங்களன்று காங்கிரஸிற்குச் செல்வதாகச் சந்தேகித்து மன்னார்குடி நடேசன், தேதியூர் ராமய்யா உள்பட 8 பேர் கைதி. சுப்பராவ் என்னும் ஆந்திரத் தலைவர் கைதியாகி கூப்பிட்ட போது ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனையின் மேல் விடுவிக்கப்பட்டார்.

பம்பாயிலிருந்து நாகபுரிக்குச் சென்று கொண்டிருந்த ஹரி மொரேசுவர் ஜோஷி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு ஏரவாடாவுக்கு அநுப்பப்பட்டார்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் சன்பாலும் பொதுக் காரியதரிசி ஹர சுந்தர சக்கரவர்த்தியும் கைதியானார்கள்.

கோவில்பட்டி முனிசிப் கோர்ட்டில் 26உயன்று 4 தொண்டர்கள் பிரவேசித்து ஒருவர் நீதிபதியாகவும், ஒருவர் வக்கீலாகவும், ஒருவர் கான்ஸ்டேபிள், மற்றொருவர் கைதியாகவும் நின்று ஆக்டு செய்து வில்லிங்டன் என்று ஒரு கைதியை நிறுத்தி 8 வருஷம் தண்டனை விதித்தனராம். பின்பு ஷை நால்வரும் கைது செய்யப் பட்டனர்.

வீடு சோதனை

காசி காங்கிரஸ் விடுதியில் போலீசார் சோதனையிட்டு 10 தொண்டர்களைக் கைது செய்தனர். கல்கத்தாவில் கதர் வஸ்திராலயமும் சோதனை யிடப்பட்டது. ஆனால் ஒன்றும் அகப்படவில்லை.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane Madras.